# PRESTO (ப்ரெஸ்டோ) உபயோகிக்கும் முறை

## 1. கார்டு வாங்குக

PRESTO கார்டை ஆன்லைனில் prestocard.ca-இல் அல்லது பின்வரும் பிராம்ப்டன் டிரான்சிட் முனையங்களில் (Brampton Transit terminals)
அல்லது வசதியகங்களில் ஏதாவது ஒன்றில் வாங்கவும்:

- பிராமலீ முனையம் (Bramalea Terminal) – 160 சென்ட்ரல் பார்க் டிரைவ்
- டௌன்டவுன் முனையம் (Downtown Terminal) – 8 நீல்சன் ஸ்ட்ரீட்
- பிராம்ப்டன் கேட்வே முனையம் (Brampton Gateway Terminal) – 501 மெயின் ஸ்ட்ரீட் சவுத்
- டிரினிடி காமன் முனையம் (Trinity Common Terminal) – 164 கிரேட் லேக்ஸ் பவுல்வர்ட்
- கிளார்க் வசதியகம் (Clark Facility) – 185 கிளார்க் பவுல்வர்ட்

வாங்குவதற்கு, $6 திருப்பி-தரத்தக்கதல்லாத வழங்கல் கட்டணமாகும்.

## 2. உங்கள் கார்டில் ஏற்றுக

PRESTO-வைக் கொண்டு, உங்கள் கார்டுக்கு வெவ்வேறு திட்டங்களை ஏற்றுவதற்கு நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும். PRESTO கார்டை ஏற்றுவதற்கு இரண்டு வகைகள் உள்ளன:

- **இ-பர்ஸ் மதிப்பைச் சேர்க்கவும்:** உங்கள் PRESTO கார்டில் குறைந்தபட்சம் $10 ஏற்றுக. அதிகபட்சமாக நீங்கள் $1,000 இருப்பு வைத்துக்கொள்ள முடியும். நீங்கள் பயணம் செய்யும்போது, உங்கள் கார்டில் நீங்கள் இருப்பு வைத்துள்ள தொகையிலிருந்து உங்களுடைய பயணத்துக்கான கட்டணம் கழிக்கப்படும்.
- **மாதாந்திர / வாராந்திர அனுமதிச் சீட்டைச் சேர்க்கவும்:** மாதாந்திர / வாராந்திர அனுமதிச் சீட்டைப் பயன்படுத்தி, அனுமதிச் சீட்டு செயல்பாட்டில் இருக்கும்போது நீங்கள் எண்ணற்ற பயணங்களை மேற்கொள்ள முடியும்.

## 3. உங்கள் கார்டை பதிவு செய்க

நீங்கள் உங்கள் கார்டை பதிவு செய்ய நினைத்தால், பிராம்ப்டன் டிரான்சிட் முனையத்திலிருந்து (Brampton Transit terminal) அல்லது வசதியகத்திலிருந்து அதை வாங்கிய பிறகு 24 மணிநேரத்திற்கு காத்திருக்கவும்.

- உங்கள் கார்டை ஆன்லைனில் prestocard.ca-இல் பதிவுசெய்திடுங்கள்.

- உங்கள் PRESTO கார்டை ஆன்லைனில் பதிவுசெய்த 24 மணிநேரத்திற்கு பிறகு, பதிவை நிறைவுசெய்வதற்கு, 30 நாட்களுக்குள் **ஏதேனும்** PRESTO சாதனத்தில்* நீங்கள் கட்டாயம் தட்டவேண்டும். 30 நாட்களுக்குப் பிறகு, உங்கள் பதிவு காலாவதியாகிவிடும். உங்கள் பதிவு காலாவதியாகிவிட்டால், உங்கள் அட்டையை மீண்டும் செயல்படுத்துவதற்கு 1-8-PRESTO-123 (1-877-378-6123)–ஐ அழைக்கவும்.

PRESTO சாதனங்களின் உள்ளடங்குபவை: பிராம்ப்டன் டிரான்சிட்

- முனையங்களிலும் (Brampton Transit terminals) வசதியகங்களிலும் உள்ள பேலன்ஸ் செக்கர்கள் அல்லது பிராம்ப்டன் டிரான்சிட் (Brampton Transit)
- பேருந்துகளில் இருக்கின்ற கட்டண செலுத்தல் சாதனங்கள். உங்கள் பயணத்தின் ஒருபகுதியாக இருந்தால் மட்டுமே உங்கள் பதிவை செயல்படுத்துவதற்காக கட்டண செலுத்தல் சாதனத்தை உபயோகிக்கவும், ஏனெனில் உங்கள் கார்டை தட்டுவதன் பேரில் அது கட்டணத்தை பிடித்தம் செய்துகொள்ளும். மாற்றாக, அந்தச் சமயத்தில் நீங்கள் பயணம் செய்யவில்லை எனில், உங்களுடைய பதிவைச் செயல்படுத்துவதற்கு பேலன்ஸ் செக்கரைப் பயன்படுத்தவும்.

**குறிப்பு:** நீங்கள் வயதுவந்தவராக இருந்து உங்களுடைய PRESTO கார்டை நீங்கள் பதிவு செய்ய விரும்பவில்லை எனில், அது இயல்பிருப்பாய் பெயர் விபரமற்ற வயதுவந்தோர் அட்டையாக இருக்கும் (**உங்கள் கார்டை பதிவுசெய்வதன் ஆதாயங்களைக்** காண்க).

# 4. தள்ளுபடி கட்டணங்களை அமைத்தல்

**மாணவர்கள் மற்றும் முதியோர்**

உங்கள் PRESTO கார்டை பதிவுசெய்துகொள்ளுமாறு உங்களுக்கு பரிந்துரைக்கப்படுகிற போதிலும், பதிவுசெய்யப்படாத கார்டுகளை மாணவர் அல்லது முதியோர் தள்ளுபடி கட்டணங்களுடன் அமைத்துக்கொள்ளலாம். தள்ளுபடி கட்டணத்தை, வாங்குதலை மேற்கொள்ளும் நேரத்தில் நேரடியாக பிராம்ப்டன் டிரான்சிட் முனையத்தில் அல்லது வசதியகத்தில் அமைத்துக்கொள்ளலாம்.

கூடுதல் பயணிகளுக்கு பணம் செலுத்துவதற்கு உங்கள் PRESTO கார்டை உபயோகித்திடுங்கள்

உங்கள் PRESTO கார்டை கட்டண செலுத்தல் சாதனத்தில் தட்டிய பிறகு, கூடுதல் பயணிகளுக்காக பணம் செலுத்த விரும்புகிறீர்கள் என்பதை பேருந்து ஓட்டுநரிடம் நீங்கள் தெரிவித்திடுங்கள். கூடுதல் பயணிகளை ஓட்டுநர் பதிவு செய்வார், கட்டணங்களைக் கழிப்பதற்கு ஓட்டுநரின் PRESTO சாதனத்தில் நீங்கள் உங்கள் கார்டை தட்டுமாறு கேட்டுக்கொள்வார்.

**குறிப்பு:** கூடுதல் பயணிகளுக்கு வயதுவந்தோர் இ-பர்ஸ் பயணச்சீட்டிற்கான கட்டணம் விதிக்கப்படும்.

# உங்கள் கார்டை பதிவு செய்வதன் பலன்கள்

உங்கள் கார்டை பதிவு செய்வதன் மூலம் நீங்கள் பின்வரும் பலன்களைப் பெற முடியும்:

**உங்களுடைய கார்டு தொலைந்துவிட்டாலோ அல்லது திருட்டுபோனாலோ உங்களுடைய இருப்புத் தொகையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். உங்களுடைய கார்டை தடை செய்து அதில் மீதமுள்ள இருப்புத் தொகையை மாற்று கார்டிற்கு மாற்றிக்கொள்ள முடியும்.**

- தவறிய கார்டு பற்றி PRESTO -வுக்கு புகாரளித்து, அந்த கார்டை தடைசெய்திடுங்கள். இழப்பு தொடர்பாய் புகாரளித்த 24 மணிநேரத்திற்குள் செலவழிக்கப்படும் தொகைக்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.
- நீங்கள் மாற்று கார்டை வாங்கி, அதில் குறைந்தபட்சமாக $10 ஏற்றவேண்டும்.
- உங்கள் புதிய கார்டை பதிவு செய்யக் கூடாது.  பழைய கார்டை தடை செய்து புதிய கார்டை பெற்ற 24 மணிநேரத்துக்குப் பிறகு, உங்களுடைய பழைய கார்டிலிருந்து தொகையைப் பரிமாற்றம் செய்வதற்கு ஆன்லைனுக்குச் செல்லவும் அல்லது PRESTO அழைப்பு மையத்தை 1-8-PRESTO-123 (1-877-378-6123) என்ற எண்ணில் அழைக்கவும்.

**உங்களுடைய கார்டில் தன்னியக்கமாக பணமேற்றப்படுவதற்கு ஆட்டோலோட் அல்லது ஆட்டோநியூ-க்கு அமைக்கவும்.**

- உங்கள் இ-பர்ஸ் இருப்பு நீங்கள் தேர்ந்தெடுக்கின்ற டாலர் தொகைக்குக் கீழே செல்லும்போது, ஆட்டோலோட் உங்கள் வங்கிக் கணக்கு அல்லது கிரெடிட் கார்டு வழியாக உங்கள் PRESTO கார்டில் தானாக பணமேற்றுகிறது.
- ஆனாலும், டாலர் தொகையானது $5 மற்றும் $60-க்கு இடையில் இருக்கவேண்டும். குறைந்தபட்ச ஆட்டோலோட் தொகை $20, அதிகபட்சம் $980 வரை.

**குறிப்பு:** குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொகைகளானது, முன்னறிவிப்பு ஏதுமின்றி PRESTO -வினால் மாற்றம் செய்யப்படுவதற்கு உட்பட்டது. உங்கள் புதிய இருப்பு, உடனடியாக உங்கள் கார்டில் காட்டப்படும்.

**வருமான வரி நோக்கங்களுக்காக ஒரு டிரான்சிட் பயன்பாட்டு அறிக்கையைப் பெறவும்.**

- பதிவுசெய்த கார்டுகள் மட்டுமே ஃபெடரல் டேக்ஸ் கிரெடிட்டிற்கு தகுதிபெறுகின்றன.
- 31 நாட்களுக்கும் மிகாத தடையில்லா காலத்தின்போது ஒற்றை ட்ரான்ஸிட் அமைப்பிற்குள் குறைந்தது 32 ஒரு-வழி பயணங்களுக்காக உங்களது PRESTO கார்டை நீங்கள் உபயோகிக்கவேண்டும். வரி செலுத்தும் சமயத்தில் வரி

நோக்கங்களுக்காக, பயன்பாட்டு அறிக்கையை PRESTO-விலிருந்து நீங்கள் அச்செடுத்துக் கொள்ளலாம்.

**உங்களுடைய பரிவர்த்தனை வரலாற்றை மதிப்பாய்வு செய்யவும்.**

- பதிவு செய்த கார்டுகளுக்கு மூன்று-மாத பரிவர்த்தனை வரலாறு ஆன்லைனில் கிடைக்கின்றது. அதைப் பார்ப்பதற்கு உங்களுடைய கணக்கில் உள்நுழையவும்.

**அவசரநிலை பயணம்**

- பயணத்தை நிறைவுசெய்வதற்கு போதுமான பணம் இல்லாத பதிவுசெய்த கார்டுதாரர்கள், ஒற்றை தட்டலுக்கும், வழங்கல் நேரத்திலிருந்து இரண்டு-மணிநேர இடமாற்றத்தைப் பெறுவதற்கும் உரிமை வழங்கப்பெறுகிறார்கள்.
- கார்டானது, நெகடிவ் பேலன்ஸிற்குள் செல்வதுடன், நீங்கள் உங்கள் அட்டையை அடுத்த முறை லோட் செய்யும்போது தானாகவே தீர்த்துக்கொள்ளும். நெகடிவ் இ-பர்ஸ் செட்டில்மெண்டானது, ரீலோட் நேரத்தில் $0.25 ஆகும்.

**குறிப்பு:** நீங்கள் வயதுவந்தவராக இருந்து, உங்களுடைய அட்டை பதிவு செய்யப்படவில்லை எனில், அவசரநிலை பயணத்தை மேற்கொள்ள உங்களுக்கு அனுமதி இல்லை.

## கட்டண பணமளிப்பு சாதனம்

எஞ்சியுள்ள இருப்பு

கழிக்கப்பட்ட இருப்பு

எஞ்சியுள்ள பரிமாற்ற நேரம்

டேப் அட்டை




## பேலன்ஸ் செக்கர்

பரிமாற்றத்தின் வரலாற்றைக் காண சாதனத்திற்கு அருகில் அட்டையைப் பிடித்திருக்கவும்




**PRESTO**-வை தொடர்புகொள்க

தொலைபேசி: **1-8-PRESTO-123** (1-877-378-6123)

இணையதளம்: **presto.ca**




Brampton Transit